**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை.**
**முன்னிலை: திரு.நா. சிவபழனி, B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வக்கோட்டை.**
2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் புதன் கிழமை
2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ பராபவ வருடம் சித்திரைத் திங்கள் 9 ஆம் நாள்

**RCS No.95/2026**

**குற்ற எண் 130/2023, U/s. 279, 337 இதச**

**உத்தரவு**

**கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தால், குற்ற எண் 130/2023, U/s. 279, 337 இதச** கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் **கண்டுபிடிக்க முடியாத வழக்காக** இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி கடந்த 18.03.2026 தேதியன்று, குற்ற பல்வகை மனு Cr.R.M.P.No.258/2026 என எண்ணிடப்பட்டது.

அந்த இறுதி அறிக்கை தொடர்பாக ஆட்சேபனை ஏதும் இருப்பின் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கும்படி இந்நீதிமன்றத்தால் கடித எண்.453/2026, 23.03.2026 ஆம் தேதி அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி 22.04.2026 ஆம் தேதியன்று நிகழ்நிலை புகார்தாரர் திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகவில்லை. எனவே, நிகழ்நிலை புகார்தாரருக்கு கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையை பொறுத்து ஆட்சேபனை இல்லை என்று நீதிமன்றம் முடிவு செய்து, காவல் துறையினரால் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, Cr.R.M.P.No.258/2026 என்ற குற்றப்பல்வகை மனுவானது RCS 95/2026 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**முடிவில்**, RCS 95/2026 ஏற்றுக்கொள்ளப்பட்டு, **குற்ற எண் 130/2023, U/s. 279, 337 இதச** கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை முடிக்கப்படுகிறது. தேவைப்பட்டால் தனிப்புகார் தாக்கல் செய்வதற்கு புகார்தாரருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**